தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
Established under Tamil Nadu Act 33 of 2008)
Karapakkam, Chennai - 600 097
Website: www.tnteu.ac.in

**Lr.No.TNTEU/COE/M.Ed. Exam Guidelines/Oct'2021/829** **Date: 01.10.2021**

**Dr.M.Govindan, Ph.D.,**
Controller of Examinations i/c

## கல்லூரி முதல்வர்களுக்கான தேர்வு வழிகாட்டு நெறிமுறைகள்
## (GUIDELINES FOR COLLEGE PRINCIPALS)

**M.Ed./M.Ed. Spl. Edn. (II-Semester) Degree Examinations, October 2021**

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் சார்பாக அனைத்து கல்லூரி முதல்வர்களுக்கும் எங்கள் அன்பார்ந்த வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறோம்.

07.10.2021 முதல் 12.10.2021 வரை நடைபெறவிருக்கும் M.Ed./M.Ed. Spl. Edn. (II Semester) தேர்வுகள் மற்றும் M.Ed./M.Ed. Spl. Edn. (I-Semester) தேர்வின் நிலுவைத்தாள்களுக்கான (Arrear Papers) தேர்வின் கால அட்டவணையை மாணாக்கருக்கு அனுப்பி, தேர்வானது Offline-ல் தங்கள் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையங்களில் நடைபெறும் என்பதனை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

M.Ed./M.Ed. Spl. Edn. (II Semester) தேர்வுகள் காலை வேளையிலும், M.Ed./M.Ed. Spl. Edn. (I Semester) நிலுவை தாள்கள் (Arrear Papers) மதிய வேளையிலும் நடைபெறும் என்பதனை தெரிவித்துக்கொள்கிறோம்.

தங்கள் மாணாக்கரின் அகமதிப்பீட்டு மதிப்பெண்களை (Internal Marks) 01.10.2021 முதல் 05.10.2021-வரைக்குள் College Login-ல் மிகுந்த கவனத்துடன் பதிவேற்றம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. பதிவேற்றம் செய்தப்பின்னர் Print Out எடுத்து அதன் Hard Copy-யினை உறையிலிட்டு, உறையின் மேல் "M.Ed. (II Semester), October 2021" என்று எழுதி **"தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், காரப்பாக்கம், சென்னை-600097."** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மதிப்பெண்களை பதிவேற்றம் செய்தப்பின்னர் எவ்வித காரணம் கொண்டும் திருத்தம் செய்ய இயலாது என்பதனை தெரிவித்துக்கொள்கிறோம்.

கல்லூரி முதல்வர், தங்கள் மாணாக்கரின் வருகைப்பதிவு விவரத்தினை 30.09.2021 தேதி அன்று வெளியிட்ட சுற்றறிக்கையினை பின்பற்றி College Login-ல் பதிவேற்றம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Hall Ticket-ஆனது தேர்வுக்கட்டணம் செலுத்திய மாணாக்கருக்கு மட்டுமே வழங்கப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கிறோம்.

கொரோனா தொற்றுப் பரவல் காரணத்தினால், கல்லூரி முதல்வர்கள் தங்கள் மாணாக்கரிடம், தேர்வு மையங்களில் சமூக இடைவெளியினை பின்பற்றி, முகக்கவசம் அணிந்து மற்றும் Sanitizer பயன்படுத்துமாறு அறிவுறுத்த வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY CONTROLLER OF EXAMINATIONS CHENNAI-600 097

M. Govindan 1.10.2021

CONTROLLER OF EXAMINATIONS i/c